கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

இரண்டாம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு 2012/2013

(மார்ச்/ஏப்ரல் 2015)

01 JUN 2015

# TLS 2143 தெரிவுசெய்யப்பட்ட நூல்கள் I

நேரம்: 03 மணித்தியாலங்கள்

முதலாம் வினாவிற்கும் ஏனையவற்றுள் எவையேனும் மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

01. பின்வரும் செய்யுள்களின்
    - i) பொருளைத் தெளிவாகத் தருக.
    - ii) அடிக்கோடிட்ட பகுதிகளின் நயத்தைக் காண்க.

அ) முல்லை வைந்நுனை தோன்ற இல்லமொடு
பைங்கால் கொன்றை மென்பிணி அவிழ
இரும்பு திரித்தன்ன மாஇரு மருப்பின்
பரல்அவல் அடைய இரலை தெறிப்ப
மலர்ந்த ஞாலம் புலம்பு புறக்கொடுப்ப
கருவி வானம் கதழ்உறை சிதறி
கார்செய் தன்றே கவின்பெறு கானம்
குரங்குஉளைப் பொலிந்த கொய்சுவற் புரவி
நரம்பார்த்தன்ன வாங்குவள்பு அரிய
பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த
தாதுண் பறவை பேதுறல் அஞ்சி
மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன்
உவக்காண் தோன்றும் - குறும் பொறை நாடன்
கறங்கிசை விழவின் உறந்தைக் குணாது
நெடும்பெருங் குன்றத்து அமன்ற காந்தட்
போதுஅவிழ் அலரின் நாறும்
ஆய்தொடி அரிவை! நின் மாணலம் படர்ந்தே

(10 புள்ளிகள்)

ஆ) கயவரைக் கைகழிந்து வாழ்தல் இனிதே
உயர்வுள்ளி ஊக்கம் பிறத்தல் இனிதே
எளியர் இவரென்றி கழ்ந்துரையா ராகி
ஒளிபட வாழ்தல் இனிது

(05 புள்ளிகள்)

இ) வரைபுரை புயமுகம் மதுமன் மாவொடு
நிரைநிரைத் தொறுவையு நடத்திர் நீவிரென்
றுரைசெய்து பெருக்கெடுத் தோங்கு மானதிக்
கரையினின் மரைமலர்க் காலி னேகினார்

(05 புள்ளிகள்)

ஈ) <u>மாயிரு ஞாலங் கொண்ட மருட்கு இனைந்தழுத வானம்</u>
காயிரு மிடர்தீர் காலாய்க் களித்தென மாரிகாலம்
போயிரு புடையில் செந்நெல் பொதிர்ந்த மார்கழி நாளையைந்து
ஆயிரு உலகுமோங்க ஆண்டகை உதித்த லோர்ந்தான்

(05 புள்ளிக

02. அகநானூற்றுப் பாடல்களில் அக உணர்வுகளைக் கையாள இயற்கை பயன்படுத்தப்பட்டிருக்குமாற்றை உதாரணங்களுடன் விளக்குக

(25 புள்ளிகள்)

03. பெரும்பாணாற்றுப்படையின் வழி வருணனையில் பல்வேறு இனக்குழு மக்களினதும் வாழ்க்கை சித்திரிக்கப்பட்டிருக்குமாற்றை ஆராய்க.

(25 புள்ளிகள்

04. சமூக வாழ்வுக்கு மட்டுமன்றி அரசியல் வாழ்வுக்கும் அவசியமானவையென 'இனியவை நாற்பது' கூறும் நெறிமுறைகளை மதிப்பிடுக.

(25 புள்ளிக

05. உமறுப்புலவரின் கற்பனைத்திறன் வெளிப்படுத்தப்பட்டிருக்குமாற்றை சீறாப்புராணம் நதிகடந்த படலத்தை ஆதாரமாகக் கொண்டு ஆராய்க.

(25 புள்ளிக

06. சூசை, மரியாள் ஆகியோரின் சிறப்புக்கள் தேம்பாவணியில் விவரிக்கப்படுவதனை மகவருள் படலத்தினை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

(25 புள்ளிக

****************************************